அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்.

ந.க.எண். 101888 /டி /2022 நாள் :12.08.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு – அக்டோபர் 2022 – தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் (CBSE/ICSE-உட்பட) – பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு தொடர்பாக அறிவுரைகள் மற்றும் செய்திக்குறிப்பு வெளியிட கோருதல் – சார்பு.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்89, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1) துறை, நாள்.14.07.2022
2. இதே எண்ணிட்ட இவ்வலுவலக செய்திக்குறிப்பு நாள்.04.08.2022.

******

பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி தமிழ்மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திகொள்ளும் வகையில் 2022–2023ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு (CBSE/ICSE-உட்பட) நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 1500 மாணவர்கள் தேர்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை வழியாக மாதம் ரூ.1500/– வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இத்தேர்வில் 50 விழுக்காடு அரசுப்பள்ளி மாணவர்களும் மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு அரசுப்பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்களும் (CBSE/ICSE-உட்பட) பொதுவான போட்டியில் தெரிவு செய்யப்படுவார்கள்.தமிழ்நாடு அரசின் பத்தாம் வகுப்பு தரநிலையிலுள்ள தமிழ்பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறி வகையில் தேர்வு நடத்தப்படும்.

பார்வை 2–ல் காணும் செய்திகுறிப்பின்படி 01.10.2022(சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் (CBSE/ICSE-உட்பட) www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்ப படிவத்தினை 22.08.2022 முதல் 09.09.2022 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணபத்தினைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களிடம் / முதல்வர்களிடம் தேர்வு கட்டணம் ரூ.50/– வுடன் 09.09.2022–க்குள் ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, தங்கள் ஆளுகைக்குட்பபட்ட அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு (CBSE/ICSE-உட்பட) பள்ளித் தலைமை ஆசிரியர் / முதல்வர்களுக்கு தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வுக்கு விண்ணப்பித்தல் குறித்து உரிய அறிவுரைகள் வழங்குமாறும், தேர்வு தொடர்பான அறிவிப்பினை மாணவர்கள் அறியும்வண்ணம் அனைத்து பள்ளிகளிலும் அறிவிப்பு பலகையில் ஒட்டவும், அதிக எண்ணிக்கையிலான தேர்வர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறு தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இது குறித்து உள்ளூர் நாளிதழ்களில் பொதுமக்கள் / மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தியாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்

ஒம்/—
இயக்குநர்

இணைப்பு

1. பார்வையில் காணும் அரசாணை (நகல்)
2. செய்திக்குறிப்பு

நகல்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது

அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

ஆணையர்,
பள்ளிக்கல்வி ஆணையரகம்,
டி.பி.ஐ. வளாகம்,
சென்னை – 600 006.

ந.க.எண். 101888 /டி /2022 நாள் : 12.08.2022

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு – அக்டோபர் 2022 – தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் (CBSE/ICSE-உட்பட) – பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு தொடர்பாக – முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கியது – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்89, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1) துறை, நாள்.14.07.2022
2. இதே எண்ணிட்ட இவ்வலுவலக செய்திக்குறிப்பு நாள்.04.08.2022.

******

பார்வையில் காணும் அரசாணையின்படி தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு 01.10.2022 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்வு தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் (CBSE/ICSE-உட்பட) பள்ளி மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்ப படிவங்கள் 22.08.2022 முதல் 09.09.2022 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளவும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்களிடம் சமர்ப்பிக்க 09.09.2022–க்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் இத்தேர்வு குறித்து அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறு தலைமை ஆசிரியர் / முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

நகல்
இயக்குநர்,
மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை – 600 006

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | இயக்குநர்,<br>தமிழ்வளர்ச்சி இயக்ககம்,<br>தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,<br>தமிழ்ச்சாலை, எழும்பூர்,<br>சென்னை –600 008 |

ந.க.எண். 015897 /டி(3)/2022 நாள் :12.08.2022

ஐயா,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு – அக்டோபர் 2022 – தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு (CBSE/ICSE-உட்பட) – தேர்வு நடத்த நிதி ஒப்பளிப்பு செய்ய வங்கி விவரம் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்89, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1) துறை, நாள்.14.07.2022
2. இயக்குநர், தமிழ்வளர்ச்சி இயக்கம் கடித எண்.8235/ஆ.மொ–4/2021, நாள்.01.08.2022.

******

பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி தமிழ்மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திகொள்ளும் வகையில் 2022–2023ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு (CBSE/ICSE-உட்பட) 01.10.2022 அன்று நடைபெறவுள்ளது. அத்தேர்வு நடத்துவதற்கு தேவைப்படும் நிதியை இவ்வலுவலக வங்கி கணக்கிற்கு ஒப்பளிப்பு செய்ய பார்வை 2–ல் காணும் கடிதத்தின் வாயிலாக வங்கி கணக்கு விவரம் கோரப்பட்டது.

எனவே, இவ்வலுவலக தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வுக்கான வங்கி கணக்கு விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| Account Name | : | Director of Government Examiantion |
| வங்கி கணக்கு எண் | : | 00000041191379616 |
| வங்கியின் பெயர் | : | State Bank Of India |
| Branch | : | PBB Nungambakkam |
| MICR No | : | 600002111 |
| IFSC Code | : | SBIN0004309 |

ஒம்/–
இயக்குநர்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை - 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 101888 / எப் 1/2021** **நாள் :** 04.08.2022

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 – தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு, அக்டோபர் 2022 – பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கக் கோருதல் – பத்திரிக்கைச் செய்தி வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

******

நடைபெறவுள்ள அக்டோபர் 2022 தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்விற்கு மேல்நிலை முதலாமாண்டு (+1) பயிலும் பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் பொருட்டு அதன் தொடர்பான செய்தி அறிவிக்கை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பொதுமக்களும், மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடவும், வானொலி/தொலைக்காட்சியில் ஒலி/ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

"இது விளம்பரம் அல்ல" எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**<u>இணைப்பு:</u>** செய்திக் குறிப்பு

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**

**தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு, அக்டோபர் - 2022**

**செய்திக்குறிப்பு**

பள்ளி மாணவ, மாணவியர்களின் அறிவியல், கணிதம், சார்ந்த ஒலிம்பியாய்டு தேர்வுகளுக்கு பெருமளவில் தயாராகி பங்கு பெறுவதைப் போன்று தமிழ் மொழி இலக்கியத் திறனை மாணவர்கள் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு நடத்தப்படவுள்ளது. இத்தேர்வில் 1500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை வழியாக மாதம் ரூ.1500/- வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இத்தேர்வில் 50 விழுக்காடு அரசுப் பள்ளி மாணவர்களும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு அரசுப் பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பிற தனியார் பள்ளி மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

தமிழ்நாடு அரசின் 10-ஆம் வகுப்பு தர நிலையில் உள்ள தமிழ் பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறி வகையில் தேர்வு நடத்தப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத் தலைநகரங்களில் இத்தேர்வு நடத்தப்படும்.

2022-2023-ம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் (CBSE / ICSE / உட்பட) பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள், **01.10.2022 (சனிக்கிழமை) அன்று** நடைபெறவுள்ள இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

இத்தேர்விற்கு மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளியின் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க இயலும். எனவே, மாணவர்கள் இத்தேர்விற்கான விண்ணப்பங்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளம் மூலம் 22.08.2022 முதல் 09.09.2022 வரை

பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணத் தொகை ரூ.50/- சேர்த்து சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். 09.09.2022.

**ஒம்**/-

**இயக்குநர்**

**சென்னை** – 600 006

**நாள்**: 04 .08.2022